இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 298 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 26 – செவ்வாய்க்கிழமை 09 ஜூன் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 298 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 26 - Tuesday 09 June 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை – அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ., பனையூர் பாபு தலைமையில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்த காட்சி!

## ஏற்கனவே இருந்த இயக்கத்தைப் பற்றி விமர்சனம் செய்ய வேண்டிய அவசியமில்லை!

# கொண்ட கொள்கைக்காக உறுதியோடு உழைக்கும் செயல்வீரர் பனையூர் பாபு!

## கழகத்தில் இணைந்த வி.சி.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை வரவேற்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூன் 9-**

**விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு தலைமையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் கழகத்தில் இணைந்தனர். இணைந்த மாற்றுக் கட்சியினரை வரவேற்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது "கொண்ட கொள்கைக்காக உறுதியோடு உழைக்கும் செயல்வீரர் பனையூர் பாபு" என்றும் "ஏற்கனவே இருந்த இயக்கத்தைப் பற்றி விமர்சனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை" என்றும் கூறினார்.**

நேற்று முன்தினம் (07.06.2026) சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற, செய்யூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் பனையூர் பாபு அவர்கள் தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணையும் விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

செய்யூர் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினர் நம்முடைய பனையூர் பாபு அவர்களையும், அதேபோன்று அவரோடு கைகோத்து வந்திருக்கும் உங்களையும் நான் வருக வருக வருக என்று வரவேற்கிறேன். மாவட்டக் கழகத்தின் சார்பில் நம்முடைய சுந்தர் அவர்கள் ஏற்கனவே வரவேற்றிருந்தாலும், தலைவர் என்ற முறையில் நான் தலைமைக் கழகத்தின் சார்பில் உங்கள் அத்தனை பேரையும் நான் வருக வருக வருக என்று வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை – அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ., பனையூர் பாபு தலைமையில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்த விழாவில் உரையாற்றிய காட்சி! உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் ஆகியோர் உள்ளனர்.

# தொடர் மின்வெட்டினால் இருளடைந்து வரும் தமிழ்நாடு!

## பல்வேறு இடங்களில் மக்கள் உரிமைப் போராட்டம்!

**சென்னை, ஜூன் 9-**

**தலைநகர் சென்னை உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் தொடர்ந்து மின்வெட்டு நிலவுவதால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். த.வெ.க. அரசின் கையாலாகாத தனத்தை கண்டித்து நள்ளிரவில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அடுத்த ஆரணி பேரூராட்சியில் த.வெ.க. ஆட்சியமைந்த பிறகு, இரவு நேரங்களில் தொடர்ந்து மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு ஒரு மணி நேரத்திற்கு மேலாக மின்தடை நீடித்ததால் பொறுமை இழந்த மக்கள் ஆரணி பஜாரில் சாலை மறியலில் ஈடுபட்டனர். பொதுமக்களின் புகார்களுக்கு செவி மடுத்து விளக்கம் அளிக்க மின்வாரிய அதிகாரிகள் முன்வருவது இல்லை என குற்றம் சாட்டினார். மேலும், மின்வெட்டு காரணமாக குழந்தைகள், முதியவர்கள் என அனைவரும் பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் புகார் தெரி வித்தனர். சாலை மறியலில் ஈடுபட்ட மக்களிடம் காவல்துறை அதிகாரிகள் சமரச பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது மின்வாரிய அதிகாரிகள் யாரும் ஏன் வரவில்லை எனக் கூறி பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காடு ஊராட்சிக்குட்பட்ட கறிக்காட்டுக்குப்பம் கிழக்கு கடற்கரை சாலை பகுதியில் நள்ளிரவில் 3 மணி நேரத்திற்கு மேலாக மின்வெட்டு ஏற்பட்டுள்ளது. இதனால், ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் நள்ளிரவில் கிழக்கு கடற்கரை சாலையை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதிகளில் பரபரப்பு ஏற்பட்டது.

இதேபோல், திருத்தணி அருகே உள்ள பள்ளிப்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதல் மின்சாரம் வழங்கப்படாதால் பொதுமக்கள் கடும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர். காலை 9 மணி முதல் 5 மணி வரை மின்தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மாலை 5 மணிக்கு பிறகும் மின்சாரம் வரவில்லை. 6, 7, 8 என நேரம் கடந்தாலும், இரவு 10 மணி வரை மின்சாரம் வழங்கப்படாததால் மக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். 13 மணி நேரத்திற்கும் மேலாக மின்சாரம் இன்றி மக்கள் அவதி அடைந்தனர்.

### மயிலாப்பூர்!

சென்னை மயிலாப்பூர், லஸ் கார்னர், அம்பேத்கர் பாலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இரவு 10 மணி முதல் மின்சாரம் இல்லை. மின்னகத்திற்கு அழைத்த போதும் உரிய பதிலை மின்வாரிய அதிகாரிகள் அளிக்கவில்லை என கூறப்படுகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த அப்பகுதி மக்கள் மயிலாப்பூர், டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் அமைந்துள்ள மின்வாரிய அலுவலகத்தை நள்ளிரவில் முற்றுகையிட்டு சாலை மறியலில் ஈடுபட்டனர். அதிலும் ஒருவர் த.வெ.க. அரசுக்கு ஆதரவாளராக இருந்த நிலையில், அவரும் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். சாலை மறியலால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மின்வாரிய அலுவலகத்தில் ஒருவர் மட்டுமே இருந்த நிலையில், அவரும் மதுபோதையில் இருந்த தாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. நாள்தோறும் இரவில் மின்வெட்டு ஏற்படுவதால் தூங்க முடியாமல் வாழ்வியலே பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

### பெரம்பூர் தொகுதியில் மின்வெட்டு! மறியல்!

முதலமைச்சர் விஜய் தொகுதியான பெரம்பூரில் தொடரும் மின்வெட்டு காரணமாக மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கொடுங்கையூர், சர்மா நகர், வியாசர்பாடி, கணேசபுரம், எம்.ஆர்.நகர், எம்.கே.பி.நகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தினமும் பல மணி நேரம் மின்வெட்டு தொடர்கிறது. இந்நிலையில் வியாசர்பாடி ஜே.ஜே.நகரில் திடீரென மின்வெட்டு ஏற்பட்டு மூன்று மணி நேரம் ஆகியும் மின்சாரம் வராததால் பொதுமக்கள் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை தொடர்பு கொண்டனர். ஆனால் அழைப்பை ஏற்காததால் பொதுமக்கள் ஆத்திரமடைந்தனர். இதனால், சத்தியமூர்த்தி நகர் சாலையில் 300க்கு மேற்பட்ட மக்கள் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து முடங்கியதோடு அப்பபகுதி முழுவதும் பரபரப்பாக காணப்பட்டது.

### மேடவாக்கம்!

இதேபோல், சென்னை மேடவாக்கத்திலும் இரவில் மின்சாரம் இல்லாததால் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். மேடவாக்கம் பிரதான சாலையில் மறியலில் ஈடுபட்டதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. 3 மணி நேரத்திற்கும் மேலாக மின்சாரம் வழங்கப்படாததால், த.வெ.க. அரசைக் கண்டித்து அவர்கள் மறியலில் ஈடுபட்டனர்.